# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.22/2024

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. T. இந்திரஜித், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சக்திவேல் (PW–1) | வயது | : | 45 /2025 |
| த/க பெயர் | : | திரு. சந்திரசேகரன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | கெழுவத்தூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்துக்கள் யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் சசிகலா என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினேன். சசிகலாவிற்கு முன்பு தாவா சொத்துக்கள் யார் பெயரில் இருந்தது என்றால் அப்பாசாமி பெயரில் இருந்தது. தாவா சொத்தை கிரயம் வாங்கும் முன்பு எத்தனை வருடத்திற்கு வில்லங்க சான்றை எடுத்து பார்த்தேன் என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தை அப்பாசாமியிடமிருந்து சசிகலா கிரயம் வாங்கிய காலத்திற்கான வில்லங்க சான்றை எடுத்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
2) தாவா சொத்தை நான் சசிகலாவிடமிருந்து கிரயம் வாங்குவதற்கு முன்பு அந்த சொத்துக்களை பொறுத்து கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் அந்த விபரத்தை நான் பார்க்கவில்லை. நான் பிரதிவாதிகள் மீது கொடுத்த புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தை அனுகுமாறு சொல்லி வழக்கு பதிவு செய்யவில்லை. தாவா சொத்துக்களை சுற்றி வேலி அமைத்துள்ளேனா என்றால் ஆமாம். எத்தனை மாதங்களுக்கு முன்பு வேலி போட்டேன் என்றால் 2022 இல் போட்டேன்.
3) இந்த வழக்கு என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன். தாவா

சொத்தை சுற்றி வேலி போட்ட விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த வேலியானது யாரும் தாவா சொத்தில் நுழையாதவாறு போட்டேனா அல்லது நுழையும் வகையில் போட்டேனா என்றால் எங்கள் வண்டி செல்வதற்கான வழிப்பாதையை விட்டு மற்ற இடங்களில் வேலி போட்டேன்.

4) எனக்கு தாவா சொத்தை கிரயம் கொடுத்த சசிகலாவை ஏன் தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சசிகலாவுடன் எந்தவித பிரச்சனையும் இல்லை என்பதால் சேர்க்கவில்லை. இந்த வழக்கில் பதிவாளரையும், காவல் துறையையும் ஒரு தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் மீது என்ன காரணத்திற்காக புகார் கொடுத்தேன் என்றால் தாவா சொத்தில் சாகுபடி செய்தபோது பிரதிவாதிகள் சண்டையிட்டதால் புகார் கொடுத்தேன். சண்டையானது வாய் வார்த்தையாக இருந்ததா அல்லது அடித்தார்களா என்றால் வாய் வார்த்தையாக பேசினார்கள். மேல்கண்ட பிரச்சனைகள் தினமும் நடந்ததா அல்லது எப்போதாவது நடந்ததா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நடந்தது , இப்போது இல்லை.

5) தாவா சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்தார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணப்படி போலிசார் நடவடிக்ககை எடுத்தாரா என்றால் மேல்நடவடிக்கையாக காவல்துறை உயர் அதிகாரிகளுக்கோ அல்லது நீதிமன்றத்தின் தனி நபர் புகார் நடவடிக்கை வேண்டி எடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணப்படி காவல்நிலைய மனு ரசீது மட்டும் தாக்கல் செய்துள்ளேன், அதற்கான புகாரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்மீது பிரதிவாதிகள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். என்ன காரணத்திற்காக புகார் கொடுத்தார்கள் என்றால் பிரதிவாதிகளின் இடத்தில் இருந்த மரக்கிளைகள் எனது நிலத்திற்கு வந்து விவசாயத்திற்கு தொந்தரவாக இருந்ததால் அதை வெட்ட சென்ற காரணத்திற்காக புகார் கொடுத்தார்கள்.

6) பிரதிவாதிகள் கொடுத்த புகாரின் மீது போலிசார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தை அனுகுமாறு போலிசார் சொன்னார்கள். சசிகலாவிடமிருந்து தாவா சொத்தை கிரயம் வாங்கும்போது சந்தை மதிப்பை கணக்கிட்டு கிரயம் வாங்கினேனா என்றால் ஆமாம். சசிகலா தாவா சொத்துக்களை சாகுபடி செய்தபோது பிரதிவாதிகளால் அவருக்கு ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. சசிகலா தாவா சொத்துக்களில் முள் வேலி போட்டிருந்தாரா

என்றால் இல்லை. சசிகலா பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்கள் சம்பந்தமாக புகார் கொடுத்திருந்தாரா என்றால் இல்லை.

7) பிரதிவாதிகளால் சசிகலாவிற்கு தாவா சொத்துக்கள் தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டதாக வாய்மொழியாக ஏதேனும் சொன்னாரா என்றால் இல்லை. தாவா சொத்தை கிரயம் வாங்கியதில் இருந்து நான்தான் அனுபவம் செய்து வருகிறேனா என்றால் ஆமாம். பிரதிவாதிகளில் யார் யார் என்னிடம் பிரச்சனை செய்தார்கள் என்றால் நான்கு பிரதிவாதிகளும் பிரச்சனைகள் செய்தார்கள். தாவா சொத்து பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை.

8) நீதிமன்றத்தில் தவறான தகவலை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் நிலத்திலுள்ள மரக்கிளைகள் எனது நிலத்திற்குள் வந்தும், ஆடு மாடுகளை விட்டும், நிலத்திற்கு வரக்கூடாது தொடர்பாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் மரக்கிளைகளை வெட்டாததால் நானே பல முறை வெட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.06 16:27:15 +0530

District Munsif
Mannargudi.